


சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (29.11.2024) சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி 2023– 2024 ஆம் ஆண்டிற்கான சட்டத் தன்னார்வ பயிற்சியாளர்களின் (Law Interns) பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு 17 தன்னார்வ பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டார். உடன் சட்டத் துறை செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டத் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள எஸ்.லூயிஸ், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். ஒன்றியச் செயலாளர் ஜி. ரவிச்சந்திரன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் பிரேமா அல்போன்ஸ், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் எம். ஆர்.ராஜீவ் காந்தி உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் உடனுள்ளனர்.

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லபாண்டியன் தலைமை ! டாக்டர் வை.முத்துராஜா ஏற்பாட்டில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! புதுக்கோட்டையில் ரேக்ளா குதிரை வண்டி - சைக்கிள் பந்தயம்!

## டி.எம்.கதிர்ஆனந்த், எம்.எம்.அப்துல்லா, துரை வைகோ, டி.செங்குட்டுவன் பங்கேற்பு!

புதுக்கோட்டை. நவ.30

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி சார்பில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா ஏற்பாட்டில் ரேக்ளா குதிரை வண்டி பந்தயம் மற்றும் சைக்கிள் பந்தயம் நாளை 1.12.2024 காலை 6.00 மணி அளவில் புதுக்கோட்டை, மச்சுவாடி ஜீவா நகரில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வடக்கு மாவட்ட செயலாளர் கேகே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

மேலும், எம்எம்.அப்துல்லா எம்பி, முன்னாள் மாவட்ட செயலாளர் பெரியண்ணன் அரசு, கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைபித்தன், மாநகரச் செயலாளர் ஆ.செந்தில்,தொகுதி பொறுப்பாளர் மண்ணை அரங்கநாதன்,கழக அமைப்புச் சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ஒன்றிய கழகச் செயலாளர்கள் முக.ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், ஆர்.சாமிநாதன், சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், அவைத்தலைவர் அரு.வீரமணி, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம்,மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் எம். லியாகத் அலி, முன்னாள் கழக நிர்வாகிகள் நைனா முகமது, வைகோ.ராஜன், விவசாய அணி துணைத் தலைவர் விஎன்.மணி, மு. கலியமூர்த்தி, தேர்தல் பணிக்குழு செயலாளர் இ ஏ.கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.சரவணன், கழகச் செய்தி தொடர்பு துணைத் தலைவர் பிடி. அரசகுமார், க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, தலைமை செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ்ராஜா, புதுக்கோட்டை விஜயா, வர்த்தக அணி துணைத் தலைவர் எம்.எஸ்.அசோக் பாண்டியன், விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் கே.ஆர் என்.போஸ், தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மாலா ராஜேந்திர துரை, பி.சின்னையா, கழக நிர்வாகிகள் ராம.செல்வராஜ், பாலகிருஷ்ணன், எம்.எம்.பாலு, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கேஎஸ். சந்திரன், முபிம.சத்தியசீலன், என். சேட்டு, ஓஎஸ்.வெங்கடாசலம், சி. சண்முகம், எம்.பரமசிவம், வெ.முத்துக்கிருஷ்ணன், ஆர்ஆர் எஸ்.மாரிமுத்து, மா.தமிழ்அய்யா, அ.இளங்குமரன், கேபி. ஐயப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் பழனியப்பன், என். சாத்தையா, ராசு.சந்தோஷ், பி. செல்லத்துரை, சிபிஆர். சித்ரா, எம். செந்தில்குமார், சக்தி ராமசாமி,முல்லை முபாரக், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினர் ஏகே.செல்வம்,மற்றும் மாவட்டக் கழக, ஒன்றிய கழக, மாமன்ற உறுப்பினர்கள், நகர கழக, கிளைக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அனைத்து அணி நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தலைவர் அ.வெற்றிச்செல்வன், மை.பால்ராஜ் எம்.சி, தங்க. துரை, கமல் சுதாகர், பி புவனேஸ்வரன் ஆகியோர் நன்றி தெரிவித்து பேசுகின்றனர்.

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிக்கை!

சென்னை, நவ.30-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி இடைவிடா சகாய மாதா ஆலயத்தில் இன்று (30.11.2024 சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையில் மாநில துணைச் செயலாளர்கள் அனவர்கான், அடையாறு சபீல் கான், வேலூர் நூருல்லா, என்.பி.எம்.சேக் அப்துல்லா, வியாயகுமார், கா. ரபி அகமது, முணவர் ஜான்,ஜோசப் ராஜ், ஷாகுல் அமீது ஆகியோரது முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்.முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மூ.மகேஷ்குமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் அனைத்து மாவட்ட, பகுதி, மற்றும் வட்டக் கழக நிர்வாகிகளும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.

குலத் தொழிலை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசின் ‘விஸ்வகர்மா யோஜனா’ திட்டத்தை

# தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தாது என அறிவித்த முதல்வருக்கு பாராட்டு!

## ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் அறிக்கை!

சென்னை, நவ.30-

குலத் தொழிலை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசின் “விஸ்கர்மா யோஜனா” திட்டத்த தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தாது என முதல்வரின் இந்த அறிவிப்பை ஆதித்தமிழர் பேரவை பாராட்டி வரவேற்கிறது என ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

சாதி படிநிலைகளை தக்க வைத்துக் கொள்வதும் அதை பாதுகாக்க நினைப்பதும் தான் பி.ஜே.பி., ஆர். எஸ்.எஸ்.கொள்கைகள்.

அந்த அடிப்படையில் தான் மோடி அரசின் விஸ்வகர்ம யோஜனா (குலத் தொழில்) புதிய கல்விக் கொள்கை, நீட் முதலிய திட்டங்கள். அதனால் தான் தமிழ்நாடு ஒருபோதும் அதனை ஏற்றுக் கொள்ளாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஆதித்தமிழர் பேரவை பாராட்டுகிறது.

தனது குலத் தொழிலை செய்யும்போது மரணமே ஏற்பட்டாலும் அது புகழ் அளிக்கிறது. என்று கூறிய ஆர்.எஸ்.எஸ்.தலைவர் கோல்வாக்கரின் சிந்தனையை அமல்படுத்துவது தான் குலத்தொழில், அதை இன்றைக்கு நவீன வடிவத்தில் அமல்படுத்துவதுதான் விஸ்வகர்மா யோஜனா திட்டம், இதற்கு சில விதிமுறைகளை கடந்தாண்டு வகுத்தளித்து தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய சிறு குறு நடுத்தர தொழில் அமைச்சகம் அனுப்பியது.

இது முழுக்க முழுக்க சாதி அடிப்படையிலான தொழில், இது சாதிய படிநிலையை, முறையை வலுப்படுத்தும் எனக் கூறி சில மாற்றங்களை பரிந்துரைத்தது தமிழ்நாடு அரசு. இதையெல்லாம் கருத்தில் கொள்ளாத ஒன்றிய அரசு விஸ்வகர்மா யோஜனா எனும் குலத்தொழில் திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்து வருகிறது.

இத்திட்டத்தை தமிழ்நாடு அரசு நிராகரிப்பதோடு சிறு குறு நடுத்தர தொழில்களை ஊக்குவிக்க ஆய்வை அரசு மேற்கொள்ளும் என ஒன்றிய அரசுக்கு தமது பதிலாக தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஆதித்தமிழர் பேரவை பாராட்டுகிறது. குலத் தொழிலை தமிழகம் நிராகரிப்பதை வரவேற்கிறது என கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவினை ஒன்றியச் செயலாளர் அ.ம.துரைவீரமணி வழங்கினார். இதில் மாவட்ட, ஒன்றிய, வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு

# கண்காணிப்பு அலுவலர் - மீட்புப் படையினர் விரைந்துள்ளனர்!

## அவசர கால செயல்பாட்டு மையத்தை ஆய்வு செய்து அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அறிவுரை!

சென்னை, நவ.30-

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் - கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பேரிடர் மீட்புப் படையினர் விரைந்துள்ளனர் - மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.



சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் நேற்று (29.11.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வங்கக் கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்ததை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும், இது 30.11.2024 அன்று பிற்பகல் காரைக்கால் மற்றும் மகாபலிபுரத்திற்கு இடையே மணிக்கு 70 முதல் 90 கிலோ மீட்டர் காற்றின் வேகத்துடன் கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் கனமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நிலைமையை தொடர்ந்து கண்காணிக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று (29.11.2024) காலை மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்துள்ள நிலையில், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

### ரெட் அலர்ட்

நேற்று (29.11.2024) செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாருர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 20 செ.மீட்டருக்கு மேலாக அதிகனமழை பெய்யக்கூடும் என்றும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 10 செ.மீட்டருக்கு மேலாக மிககனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று (29.11.2024) காலை 8.30 மணி வரை சராசரியாக சென்னை 2.7 செ.மீ., செங்கல்பட்டு 0.76 செ.மீ., மயிலாடுதுறை 0.71 செ.மீ., திருவள்ளூர் 0.64 செ.மீ., நாகப்பட்டினம் 0.40 செ.மீ., திருவாரூர் 0.3 செ.மீ., காஞ்சிபுரம் 0.16 செ.மீ., தஞ்சாவூர் 0.09 செ.மீ., கடலூர் 0.06 செ.மீ. உள்ளிட்ட சில மாவட்டங்களில் மழை பெய்துள்ளது.

குறிப்பாக,

சென்னை - சாத்தாங்காடு 6.1 செ.மீ., எர்ணாவூர் 5.8 செ.மீ.,

செங்கல்பட்டு - பல்லாவரம் 2.92 செ.மீ., செம்மஞ்சேரி 2.4 செ.மீ.

திருவள்ளூர் - திருப்பாலைவனம் 2.56 செ.மீ., திருவெள்ளைவாயில் 2.56 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

### நிவாரண முகாம்கள்

அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் 2229 நிவாரண மைய கட்டடங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. தற்போது திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 6 நிவாரண முகாம்களில், 164 குடும்பங்களைச் சேர்ந்த 471 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

### மீனவர்கள்

மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க மீன்வளத் துறை இயக்குநருக்கும், கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கும் 23.11.2024 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு கடற்கரையில் மீன்பிடிக்கச் சென்ற 4153 படகுகள் கரை திரும்பியுள்ளன.

### கண்காணிப்பு அலுவலர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதுமட்டுமின்றி, நேற்று (29.11.2024) செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர்.

இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் வ. மோகனச்சந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

மீட்பு உபகரணங்கள்

| மாவட்டம் | JCB | படகுகள் | ஜெனரேட்டர்கள் | மர அறுப்பான்கள் | மோட்டார் பம்புகள் |
|---|---|---|---|---|---|
| நாகப்பட்டினம் | 125, | 75, | 250, | 281, | 31, |
| மயிலாடுதுறை | 85, | 70, | 164, | 57, | 34, |
| திருவாரூர் | 125, | 18, | 142, | 73, | 18, |
| தஞ்சாவூர் | 59, | 29, | 69, | 711, | 42, |
| கடலூர் | 242, | 51, | 28, | 104, | 58, |
| சென்னை | 96, | 120, | 130, | 118, | 1686, |
| செங்கல்பட்டு | 102, | 116, | 83, | 245, | 114, |
| திருவள்ளூர் | 83, | 317, | 81, | 154, | 206, |
| காஞ்சிபுரம் | 276, | 10, | 30, | 43, | 250, |
| **மொத்தம்** | **1193,** | **806,** | **977,** | **1786,** | **2439** |

### மீட்புப் படை

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி ஏற்கனவே நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு பேரிடர் மீட்புப் படைகள் அனுப்பப்பட்டுள்ள நிலையில், இன்று (29.11.2024) செங்கல்பட்டு மாவட்டத்திற்கு தேசிய பேரிடர் மீட்புப் படையின் 1 குழுவும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 2 குழுக்களும், விழுப்புரம் மாவட்டத்திற்கு தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் தலா 1 குழுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.





சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137 (அ) வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் வட்டக் கழகச் செயலாளர் அ.கதிரேசன் தலைமையில் பகுதிச் செயலாளர்கள் ஜே.கண்ணன் எம்.சி., மு.ராசா எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன், கழகப் பேச்சாளர்கள் கந்திலி கரிகாலன், சொ. தமிழினியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., க.தனசேகரன் எம்.சி., கவிஞர் காசி முத்துமாணிக்கம், வே.உமாகாந்த், எம். கிருஷ்ணமூர்த்தி, சென்னை த.அரங்கநாதன், உ.துரைராஜ், ஆர்.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், பொன்.வர.லோகு, ஆர்.ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா எம்.சி., நிலவரசி துரைராஜ் எம்.சி. உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.